<u>முதன்மை சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>

**<u>14.07.2026</u>**

OS. No. 9/2015

பக்கம் – 3

PW1 – ராமலிங்கம்

**<u>பிரதிவாதியின் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் ஏழுமலையின் மகள் வயிற்று பேரன் என்றால் சரிதான். ஏழுமலை செட்டியார் 1986ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். தாவா சொத்து ஏழுமலை செட்டியாரின் சுய சம்பாத்திய சொத்தா என்றால் இல்லை. அவருக்கு பாக பிரிவினை மூலமாக கிடைத்த சொத்தாகும். என்னுடைய விலாசம் எண்.5, மெட்லிரோடு, டி நகர், சென்னை என்றால் சரிதான். ஆனால் தற்போது நான் அந்த விலாசத்தில் இல்லை. IP.No. 81/1999 நொடித்தவர் என்று மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்டவர் என்றால் சரிதான். ஆனால் அதை நான் செட்டில் செய்து விட்டேன். பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிருரையில் நான் நொடித்தவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் நொடித்தவர் என்பதை செட்டில் செய்துவிட்டேன் என்பதை காட்ட நீதிமன்றத்தில் ஆதாரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஆனால் என்னிடம் உள்ளது. எந்த ஆண்டு நான் நொடித்தவர் என்ற விளம்புகையை விலகல் செய்தேன் என்றால் கடந்த ஆண்டு அதாவது இந்த தாவா தாக்கல் செய்த பிறகு. 5ம் பிரதிவாதி உமாபதியின் Sale Deedயை நான் பாத்துள்ளேனா என்றால் இல்லை. உமாபதியின் விலாசத்தை நான் எப்படி தெரிந்துக்கொண்டேன் என்றால் வேறு ஒரு நபரிடம் கேட்டு தெரிந்து கொண்டேன். வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்புவதற்கு முன்பாக தெரிந்து கொண்டேனா அல்லது அனுப்பிய பிறகா என்றால் அறிவிப்பு அனுப்புவதற்கு முன் . நான் கூட்டு சுவாதீனத்தில் 1986 மற்றும் 2006ல் இருந்தேன் என்பதற்கு என்ன ஆதாரம் தாக்கல்

செய்துள்ளேன் என்றால் கூட்டுக் குடும்பமாக இருந்ததால் ஆதாரம் இல்லாததல் தாக்கல் செய்யவில்லை. என் அம்மா எப்போது இறந்தார் என்றால் என் தாத்தா இறப்பதற்கு முன்பே இறந்துவிட்டார். என் தாத்தா இருந்த காலத்தில் எனது அப்பாவிற்கு மாப்பிள்ளை என்ற அந்தஸ்தில் சொத்து ஏதும் கொடுத்தாரா என்றால் இல்லை. தாவா சொத்து எங்கு உள்ளது என்றால் காஞ்சிபுரம் மாவட்டம், மதுரமங்கலம் கிராமத்தில் உள்ளது. கூட்டுக் குடும்பம் என்பதற்கு என்ன ஆதாரம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் கூட்டுக் குடும்பமாக இருந்ததால் தாவா சொத்தை பிரிக்கப்படாமல் இருந்ததால் ஆதாரம் இல்லாததால் தாக்கல் செய்யவில்லை. எனது தாத்தா இறந்த பிறகு எனது மாமாக்கள் ஆகிய 1 முதல் 3 பிரதிவாதிகள் விளைச்சலில் எங்கள் குடும்பத்திற்கு பங்கு கொடுத்தார்களா என்றால் இல்லை. குடும்பத்தில் பஞ்சாயத்து நடந்தாக நான் சொல்லியுள்ள நிலையில் எந்த ஆண்டு நடந்தது என்றால் 2011ல் நடந்தது. 2011 என்ற வருடத்தை குறிப்பிட்டு என்னுடைய பிராதில் சொல்லாததின் காரணம் என்ன என்றால் சாட்சி அதற்கு உரிய பதில் அளிக்கவில்லை. எனது அம்மா ஏழுமலை செட்டியாரின் முதல் மனைவியின் மகள் ஆவார். நான் வழக்கறிஞர் மூலமாக வா.சா.ஆ.2 வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தேன் என்றால் சரிதான். நான் சென்னையில் செட்டில் ஆகிவிட்டோம் என்றும் அதனால் எங்களுக்குரிய பாகத்தை வா.சா.ஆ.2 ஆவணத்தில் பிரதிவாதிகளுக்கு நான் முதல் முறை பாகம் கோரியது போல் அனுப்பி உள்ளேன் என்றால் சரிதான். உமாபதி இடத்தின் சர்வே எண். 922/2 மற்றும் 922/3 என்றால் சரிதான். சர்வே எண். 929 என்று பிராதில் குறிப்படிப்பட்டுள்ளது தான் சரி

தான் தவறுதலாக 922 என்று சொல்லியுள்ளேன். 5 ம் பிரதிவாதி பெயரில் தான் பட்டா உள்ளது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. தாவா சொத்தில் எனக்க ஒரு பாகம் உள்ளது என்று எனக்கு எப்போது தெரிய வந்தது என்றால் எனது அம்மா இறந்த பிறகு தெரிய வந்தது. நான் தாக்கல் செய்திருந்த IPல் என்னுடைய பாகம் பிரிக்கப்படாத சொத்தில் எனக்கு பாகம் உள்ளது குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.2 ஆவணத்தில் எந்த சொத்து விவரமும் காணப்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தின் 2வது ஐட்டம் எனது தாத்தா பெயரில் உள்ளதற்கு என்ன ஆவணம் உள்ளது என்றால் ஆதாரம் எதுவும் இல்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தில் என் தாத்தாவிற்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் தற்போது உள்ளன என்றால் சரிதான். 929/1 மற்றும் 929/2 ஆகிய இரண்டு சொத்துகளுக்கு மட்டும் பாகம் கோரியுள்ளதற்கு என்ன காரணம் என்றால் இந்த இரண்டு சொத்துக்களுக்கும் எங்களுக்கு பவர் மற்றும் பாகம் உள்ளது. அதை எங்களுடைய அறிவுக்கு எட்டாமல் விற்பனை செய்ததால் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள மற்ற சொத்துகளிலும் எங்களுக்கு பாகம் உண்டா என்றால் உண்டு. நான் வழக்கறிஞர் அறிவிப்பு கொடுக்கும் போது 929/1 மற்றும் 929/2 என்ற புல எண்ணை தவிர்த்து மற்ற புல எண்ணை குறிப்பிடாததற்கு என்ன காரணம் என்றால் இந்த 2 சொத்துக்கள் மட்டும் தான் விற்கப்பட்டிருந்தது மற்ற சொத்துக்கள் விற்கப்படவில்லை அதனால் குறிப்பிடவில்லை. எனது தாவாவில் மற்ற சொத்துக்களை பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். IP மனுவில் மற்ற சொத்துக்களை குறித்து எங்கள் குடும்பத்தின் பிரிபடாத பாகத்தை குறிப்பட்டுள்ளேனா

என்றால் இல்லை. என் உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் எனது தம்பி மட்டும் தான்.

(பிரதிவாதியின் வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

Sd/– J.மோகனா,
முதன்மை சார்பு நீதிபதி,
காஞ்சிபுரம்.